TNRM010060872023

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 11-ம் நாள் செவ்வாய்கிழமை
மோ.வா.வி.கோ.தீ.அசல் மனு எண். 236/2023
CNR No: TNRM01-006087-2023
****

1) அப்துல்லா
2) ஆய்ஷா

**..... மனுதார்கள்**

**/எதிர்/**

1) A.R. ஹமீது அலி,
2) மேலாளர், இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்.,
மதுரை-625 016.

**.... எதிர்மனுதாரர்கள்**

இம்மனுவானது 11.06.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. முரளிகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.A. தர்மராஜ் அவர்கள் ஆஜராகியும் 1ம் எதிர்மனுதாரர் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டார். மனுதாரர்கள் அழைக்கப்படும் ஆஜரில்லாத நிலையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

இம்மனு மோட்டார் வாகன விபத்துச் சட்டம்-1988 பிரிவுகள் 140, 141, 142, 163(பி), 166, 182(ஏ)-ன் படியும் உடன் இணைந்த மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாய விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 54/1994 விதி 3(1)-ன் கீழ் மோட்டார்

TNRM010060872023

வாகன விபத்தில் இறந்தவர் சும்சுதீன். அவரின் வாரிசுகளான மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,00,000/- இழப்பீடாக 1 முதல் 2 எதிர்மனுதாரர்களை கொடுக்க உத்தரவிட்டும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாக்கல் தேதியிலிருந்து நீதிமன்றத்தில் இழப்பீடு பணம் செலுத்தும் தேதி வரை 12% வட்டியுடனும் இம்மனுவிற்கான செலவுத்தொகையையும் சேர்த்து எதிர்மனுதாரர்கள் கொடுக்கும்படி உத்தரவு கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று இம்மனு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டது. மனுதாரரர்களை அழைத்தும் ஆஜர் இல்லை. எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யப்படவில்லை. எனவே இம்மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது..

2024ம் ஆண்டு ஜுன் மாதம் 11-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

உபயதரப்பு சாட்சிய சான்றாவணங்கள் இல்லை.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**M.C.O.P.No.236/2023**

**சீரானஉத்தரவு/ வரைவு உத்தரவு**

**நாள்: 11.06.2024.**